கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு - I

பகுதி - 1

**Kerala Reader - Tamil**

**Standard - I**

**Part - 1**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் **(SCERT)**, கேரளம்

**2015**

JT 203-1/Tamil-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு.

இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான்  உயிரினும் மேலாக மதிக்கிறேன்.

அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன்.

அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர்,  மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன்.

எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன்.

அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

Prepared by :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
Website : www.scertkerala.gov.in
e-mail : scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
First Edition: 2014, Reprint : 2015
© Government of Kerala    Department of Education

மலரும் முல்லை மொட்டுக்களே!

இந்நூலில்...
உங்களுக்கு விருப்பமான
கதைகள் உள்ளன;
பாடல்கள் உள்ளன.
தனித்தும்
உங்கள் நண்பர்களோடு
சேர்ந்தும் செயல்பட
ஏராளம் செயல்பாடுகள் உள்ளன.
வரைந்தும் வாசித்தும் எழுதியும் வளர
வாசற்கதவு
இதோ...
உங்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
தேன் தேடும் பட்டாம்பூச்சியாய்ப்
பறந்து பறந்து அறிவுத்தேன் எடுக்க
இந்நூல் உங்களுக்காக
வடிவமைக்கப்பட்டுள்ளது.
தங்கள் கற்றல் சிறக்க வாழ்த்துகள்.

முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம்

# Textbook Development Committee

## Tamil (Part - 1)

### Members

Babu.S, PD Tr., GLPS, Devikulam, Idukki.

Beula Elizabeth.A, UPSA, GUPS,Malakkappara, Trichur.

Dominic Savio.J, HSA, SFXHS, Parisakkal, Palakkad.

Krishnamoorthy.M, PD Tr., GLPS, Kunnamkattupathy, Palakkad.

Muniyandi.K, LPSA, GHS, Meenachipuram, Palakkad.

Prakasam.P, LPSA, ALPS., Kalaar, Munnar, Idukki.

Robert Xavier.M, Headmaster, ALPS, Attempathy, Palakkad.

Selvam.Y, LPSA, Lutheran LPS., Dymock, Idukki.

Thankaraju.T, LPSA, G.H.S., Meenachipuram, Palakkad.

Venu Gopal.G, PD Tr., G.L.P.S., Perumparachalla, Palakkad.

Dr.Vishnukumaran.T, Asst.Prof., Dravidian University, Andhra Pradesh.

### Experts

Dr. Doctor Nazeemdheen.P, (Prof.Rtd.), University of Kerala

Dr. Parasuraman.T, Prof., PILC, Pondichery.

Dr. Ratnasabapathy.P, Prof.(Rtd.), Chennai.

Dr. Veerappan.P, Prof., (Rtd.), NCERT, Mysore.

Dr. Gomathynayagam.E, Guest. Lr, University of Madras, Chennai.

### Artists

Krishnan Kutty, Spl.tr., Palakkad.

Nandhakumar.C, Chittur, Palakkad.

**Academic Co-ordinator**

Dr.Sahaya Dhas.D, Research Officer, SCERT.

State Council of Educational Research and Training(SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்

பக்கம்


1. பேசும் பொம்மை ........................................08 - 21


2. வீடும் கூடும் ........................................ 22 - 39

3. மழை ........................................ 40 - 53

4. விதைப்போம் மகிழ்வோம் ........................ 54 - 69

5. பூக்களும் காய்களும் ........................ 70 - 81

6. ஏமாற்றாதே...! ஏமாறாதே...! ........................ 82 - 96


















பெயர் :
வகுப்பு :
அப்பா பெயர் :
அம்மா பெயர் :
ஊர் :
அலைபேசி எண் :

அலகு 1

# பேசும் பொம்மை



# அழகு பொம்மை

அப்பா தந்த பொம்மை இது
அருமையாகப் பேசுது.
அம்மா தந்த சட்டை இது
அழகாக இருக்குது.
தாத்தா தந்த பட்டம் இது
வானத்திலே பறக்குது.
பாட்டி தந்த மிட்டாய் இது
வாயெல்லாம் இனிக்குது.
அக்கா தந்த வளையல் இது
கல கல எனச் சிரிக்குது.





## வட்டமிடுங்கள்.

- பாடலில் உள்ள அகிலாவின் குடும்பத்தினரை வட்டமிடுங்கள்.

## கலந்துரையாடுங்கள்.

- அகிலாவின் பிறந்த நாளுக்கு வந்தவர்கள் யார் யார்?
- என்னென்ன பரிசுகள் கிடைத்தன?

## நீ என்ன சொல்லுவாய்?




அப்பா தந்த பொம்மை.
வெள்ளை நிறப் பொம்மை.
பேசும் பொம்மை.
எனக்குப் பிடித்த பொம்மை.

அம்மா தந்த சட்டை.
ஊதா நிறச் சட்டை.
மின்னும் சட்டை.
எனக்குப் பிடித்த சட்டை.



- உங்கள் வீட்டில் யார் யார் உள்ளனர்?
- உங்கள் வீட்டிற்கு உறவினர்கள் எப்பொழுதெல்லாம் வருவார்கள்?
- உங்கள் வீட்டில் என்னென்ன விழாக்கள் நடந்துள்ளன?
- என்னென்ன பரிசுகள் தந்தார்கள்?
- உங்களுக்குக் கிடைத்த பரிசுகள் பற்றிச் சொல்லுங்கள்.

## வரையுங்கள்- நிறம் கொடுங்கள்.



## கண்டுபிடியுங்கள்-எழுதுங்கள்.

அப்பா        அம்மா

அகிலாவின் பிறந்த நாளுக்கு வந்த இரண்டு பேர் இச்சொற்களில் ஒளிந்துள்ளார்கள். அவர்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.






அக்கா


கருப்பு நிறத்தவன், வானில் பறப்பவன் இச்சொல்லில் ஒளிந்துள்ளான். அவன் யார்? அவனைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.



## இதிலிருந்தும் அதிலிருந்தும்.




## குழுவில் சேராததை வட்டமிடுங்கள்.





| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | அப்பா | தாத்தா | அண்ணன் | அக்கா |
| அப்பா | பாட்டி | தாத்தா | தம்பி | மாமா |

- ப க் த் ம் ப்
- பா மா டி தா கா
- டி பி மி கி தி ட



# பொம்மை அலறியது



“ஒன்று, இரண்டு, மூன்று ...”
அகிலா சொல்லத் தொடங்கினாள்.
அண்ணன், அக்கா, தம்பி,
பாப்பா, பாமா...



ஒளிய இடம் தேடினர்.
நாயும் ஒளிய ஓடியது.
“நீ வேண்டாம்.”
பொம்மை சொன்னது.
நாய்க்கு ஏமாற்றமானது..
“நீ இங்கு இரு”
அகிலா பொம்மையைக்
கிணற்றுக்கு அருகில் வைத்தாள்.
நாய் சுற்றும் முற்றும் பார்த்தது.
பொம்மை தனியாகக்
கிணற்றுக்கருகில்....
நாய் ஓடிச் சென்றது.
“ஐயோ”
பொம்மை அலறியது.




## கலந்துரையாடுங்கள்.

- நாய் என்ன செய்திருக்கும்?
- ஏன் அப்படிச் செய்தது?
- பேசும் பொம்மையை யார் காப்பாற்றியிருப்பார்கள்?
- எப்படிக் காப்பாற்றியிருப்பார்கள்?
- நாயை என்ன செய்திருப்பார்கள்?


## பேசும் பொம்மையைக் காப்பாற்றுங்கள்.



## அகிலாவின் குடும்ப மரம்.




# யாருக்கு என்ன வேலை?

| | | |
|---|---|---|
|  | | |
|  | | |
|  | | |
|  | | |
|  | | |
|  | | |

- அதிகமான வேலை செய்வது யார்?
- நீ என்னென்ன வேலைகள் செய்வாய்?
- இனியும் என்னென்ன வேலைகள் செய்ய முடியும்?

# பொம்மையைத் தேடி















படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.






JT 203-2/Tamil-1

## சொல்லுங்கள்.

- நாய் வீட்டிற்குத் திரும்பிப் போயிருக்குமா?
- அகிலா யார் யாரிடம் விசாரிக்கிறாள்?
- வேறு யாரிடமெல்லாம் விசாரித்திருப்பாள்?
- நாய் எப்படி வீட்டைக் கண்டுபிடிக்கும்?
- நீங்கள் இப்படி எப்பொழுதாவது வழி தெரியாமல் திண்டாடியிருக்கிறீர்களா?
- வழி மறந்துவிட்டால் வீட்டை அடைவது எப்படி?

## ஓர் எழுத்து மாறினால்...

| | | | |
|---|---|---|---|
|  | நாய் |  | ________ |
|  | ________ |  | ________ |
|  | ________ |  | ________ |

## கலந்துரையாடுங்கள்.

- பேசும் பொம்மை அகிலாவிற்குத் திரும்பக் கிடைத்தது எப்படி?
- உங்கள் பொம்மையாக இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?
- பேசும் பொம்மையை எப்படித் தேடியிருப்பீர்கள்?

## நானே வாசிப்பேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| படி | - | பாடி | மடி | - | மாடி |
| தடி | - | தாடி | கடி | - | காடி |
| நடி | - | நாடி | | | |


## நானே எழுதுவேன்.




## நான் கற்ற சொற்கள்.

## செயல் திட்டம்.

எங்கள் குடும்ப மரம்.




## சொல்லுங்கள்.




- அகிலா செய்தது சரியா? தவறா?
- நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

## அகிலாவிற்குப் பொம்மை செய்து கொடுப்போமா?



## நானே பாடுவேன்...



தாத்தா தாத்தா தா தா

படபட பட்டம் தா தா

பாட்டி பாட்டி தா தா

மடமட பப்படம் தா தா

அம்மா அம்மா தா தா

அடடா அப்பம் தா தா

## கொஞ்ச நேரம் கொஞ்சலாம்!

- உன் அப்பா, அம்மா உன்னை எப்படிக் கொஞ்சுவார்கள்?
- உன் தாத்தா எப்படிக் கொஞ்சுவார்?
- நீ அவர்களை எப்படிக் கொஞ்சுவாய்?



# அலகு 2 வீடும் கூடும்

## இடம் தருவாயா?

எலி கோழியிடம் சென்றது.

“கோழி அக்கா... கோழி அக்கா...


தங்க இடம் தருவாயா?”

“கொக் ... கொக்.. கொக்கக்கோ...

என் வீட்டில் இடம் இல்லை”.

எலி பசுவிடம் சென்றது.





“பசு அக்கா... பசு அக்கா...

தங்க இடம் தருவாயா?”

“ம்மா.... ம்மா... ம்மா...

என் வீட்டில் இடம் இல்லை”.


பசு அக்கா சொன்னது.

பாவம் எலி! மழையில் நனைந்து நின்றது.


## கலந்துரையாடுங்கள்.

- எலி வேறு யாரிடமெல்லாம் தங்க இடம் கேட்டிருக்கும்?
- அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்?
- அவர்கள் ஏன் இடம் தராமல் விரட்டினார்கள்?
- உங்களிடம் கேட்டால் என்ன செய்வீர்கள்?


## இவர்கள் வசிப்பது எங்கே?




கோழி




நாய்




பசு

## வாசிப்போம்.

கோழி  தரும்.

பசு  தரும்.

 வீட்டைக் காக்கும்.


## வாசியுங்கள், வட்டமிடுங்கள்.

- எலி யார் யாரிடம் தங்க இடம் கேட்டது?

## சிந்தனைக்கு...








- உங்கள் வீட்டில் எந்தெந்தப் பிராணிகளை வளர்க்கிறீர்கள்?
- அவற்றிற்குத் தனி இடம் உண்டா?
- அதற்கு என்ன கொடுப்பீர்கள்?
- எப்படிக் கொஞ்சுவீர்கள்?
- நீங்கள் வளர்க்காமல் உங்கள் வீட்டில் என்னென்ன பிராணிகள் வசிக்கின்றன?
- அவற்றை உங்களுக்குப் பிடிக்குமா?
- ஏன் பிடிக்கும்? ஏன் பிடிக்காது?

# எலி வீடு

‘எனக்கு வீடு வேண்டும்’

எலிக்கு ஆசை வந்தது.

ஆமை வந்தது.

ஆலோசனை தந்தது.

ஆடு வந்தது.

ஆப்பிள் தந்தது.

ஆப்பிள் தரை ஆனது.

காகம் வந்தது.

வடை தந்தது.



வடை சுவர் ஆனது.

பூனை வந்தது.

பப்படம் தந்தது.

பப்படம் கூரை ஆனது.

எலிக்கும் வீடு ஆனது.

எலிக்குப் பசி வந்தது.

வீடு என்ன ஆனது?











## உரையாடுங்கள்...

- எலிக்கு வீடு கட்ட உதவியவர்கள் யார் யார்?
- நமக்கு வீடு எதற்கு?
- விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் வீடு உண்டா?
- உங்கள் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன?
- என்னென்ன அறைகள் உள்ளன?

## வரைவோம்; நிறம் கொடுப்போம்.





## கண்டுபிடியுங்கள்!

- **ஆடை**யில் உண்டு. **வாடை**யில் இல்லை.

  **மைனா**வில் உண்டு. **சைனா**வில் இல்லை.

- **வலி**யில் உண்டு. **எலி**யில் இல்லை.

  **தடை**யில் உண்டு. **தலை**யில் இல்லை.

## புதிய சொற்கள் உருவாக்குவோம்!



| | | |
|---|---|---|
| எ | டை | எடை |
| க | | |
| வி | | |
| வ | | |
| அ | | |
| ம | | |
| வா | | |
| ப | | |
| ஆ | | |
| த | | |



## வாசியுங்கள்.

காடு வீதி ஆட்டம் பாட்டு

## படம் பார்த்து எழுதுங்கள்.

 ______  ______

## என்னால் வாசிக்க முடியும்.

- அக்கா ஆடு.
- தாத்தா வீட்டு ஆடு.
- அப்பா கதவை அடை .
- தம்பி பாட்டுப் பாடு.
- ஆடிப் பாடு.
- மாமா கடை வடை.

# எலிச் சண்டை










எலிகள் இரண்டு சண்டையிட
பானை எல்லாம் உருண்டன.
சத்தம் கேட்டு வந்த அம்மா
தடியைக் கையில் தூக்கினாள்.
எலியை ஓங்கி அடிக்கவே
எலிகள் தாவி ஓடின.
தட்டு மேலே பட்டிடவே
தட்டு நெளிந்து போனது.
ஓங்கி ஓங்கி அடிக்கவே
எலிகள் தப்பி ஓடின.
பானை மேலே பட்டிடவே
பானை உடைந்து போனது.
தொல்லை தொல்லை தொல்லையே
எலியால் என்றும் தொல்லையே!

❀ பாடலை இசையோடு பாடுங்கள்.

## குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்.

-    
- ஆடு ஆமை காகம் வடை
- டை மை லி கை பை





## அடுத்தது என்ன? எழுதுங்கள்.

- படி, பாடி - தடி, ______
- அடி, ஆடி - அடை, ______
- கடை, காடை - தடை, ______

## வட்டமிடுங்கள்; எழுதுங்கள்.

- பானையை உடைத்தது யார்? - எலி, அம்மா

## வரையுங்கள்; எழுதுங்கள்.



✽ எலி என்ற சொல் பாடலில் எத்தனை முறை வந்துள்ளது? வட்டமிட்டு எண்ணிப்பாருங்கள்.

## எந்தப்பொருள்? எந்த அறை?

படத்தின் கீழேயுள்ள வட்டத்தில் பொருத்தமான நிறம் கொடுங்கள்.


சமையலறை (சிவப்பு) படுக்கையறை (பச்சை) வரவேற்பு அறை (மஞ்சள்)

கழிவறை (நீலம்) உணவு அறை (ஆரஞ்சு)

| | | |
|---|---|---|
|  |  |  |
| ○ | ○ | ○ |
|  |  |  |
| ○ | ○ | ○ |
|  |  |  |
| ○ | ○ | ○ |
|  |  |  |
| ○ | ○ | ○ |

# ஏமாந்த எலி


பசிக்குதே! எல்லாரும் எப்பொழுது வெளியே செல்வார்கள்?
அப்பாடா... ஓர் ஆள் போகப்போகிறார்.
நான் வயலுக்குப் போகிறேன்....
அப்பாடா... அடுத்த ஆளும் போகப்போகிறார்.
லட்டுத் தின்னும் லதாவும் போய்விட்டாள்...





✿ படங்களைப் பார்த்துக் கதை கூறுங்கள்

## உரையாடுங்கள்...

- அம்மா என்னென்ன வேலைகள் செய்கின்றார்?
- அப்பாவின் வேலை என்ன?
- அண்ணனின் வேலை என்ன?
- லதா எங்கே போகிறாள்?
- உங்கள் வீட்டில் யார் யார் உள்ளனர்? என்னென்ன வேலைகள் செய்கின்றனர்?

## விடுகதைக்கு விடை கூறுங்கள், எழுதுங்கள்.


- ஓட்டு வீட்டுக்காரன், ஓட முடியாதவன். அவன் யார்?




- கருப்பு நிறத்தவன், ஊரைச் சுத்தம் செய்பவன். அவன் யார்?



## மீதியை வரைந்து பாருங்கள்; நிறம் கொடுங்கள்.





# குருவிகளே... குருவிகளே...





குருவிகளே... குருவிகளே...

எங்கே போறீங்க?

ஆலமரக் கூட்டில் நாங்க


அடையப் போகிறோம்.

எறும்புகளே... எறும்புகளே

எங்கே போறீங்க?

புற்றுக்குள்ளே உணவை நாங்க

சேர்க்கப் போகிறோம்.



தேனீக்களே... தேனீக்களே...

எங்கே போறீங்க?

கூட்டுக்குள்ளே தேனை நாங்க

சேர்க்கப் போகிறோம்.



* எலி வேறு யாரிடமெல்லாம் விசாரித்திருக்கும்?
* அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்?

  ____________ எங்கே போறீங்க?

  ____________ சேர்க்கப் போகிறோம்?

## அவரவர் வீடு - சொல்லுங்கள்; இணையுங்கள்.


* குருவி இருப்பது ____________



* சிங்கம் இருப்பது ____________



* எலி இருப்பது ____________



* தேனீ இருப்பது தேன் ____________



* சிலந்தி இருப்பது சிலந்தி ________



## நானே வாசிப்பேன்.

| | |
|---|---|
| வைகை | வை கை |
| பலகை | பல கை |
| விதை | விதை விதை |

## இது என்ன வீடு? எழுதுங்கள்; இணையுங்கள்.

குடிசை



அடுக்குமாடி



ஓட்டு



மாடி



## விடுபட்டதை நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அலை | - | ஆலை | அடி - | ------------ |
| -------- | - | பாடி | மடு - | ------------- |
| -------- | - | தாடை | கடை - | ------------- |

## முழுமைப்படுத்துங்கள்; பாடுங்கள்.

(அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி)

தட்டு... தட்டு... கை தட்டு

தம்பிப் பாப்பா கை தட்டு

கட்டு... கட்டு... கை கட்டு

தம்பிப் பாப்பா கை கட்டு



____ _____ _____ ____

____ _____ _____ ____

## நானே பாடுவேன்!


தத்தித் தத்தி வா வா வா

தம்பிப் பாப்பா வா வா வா

ஆடி ஆடி வா வா வா

பாடிப் பாடி வா வா வா





ஆடு தம்பி ஆடு

ஆடி ஆடிப் பாடு


ஆடு தம்பி ஆடு

தாத்தா வீட்டு ஆடு

## இரண்டு குழுக்களாக்குங்கள்.

அவல், ஆமை, அமை, ஆடி,
அப்பம், அடி, ஆவல், ஆப்பம்,

### பாடி மகிழ்!



அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
மீதிப் பழம் என்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.



அலகு 3

# மழை

## வானில் மேகம் கூடுது!

வானில் மேகம் கூடுது!
வாடைக் காற்றும் வீசுது!
மின்னல் மின்னி மறையுது!
மீன்கள் துள்ளிச் சாடுது!
இடியின் சத்தம் கேட்குது!
இருட்டு எங்கும் பரவுது!





மழையும் தூறல் போடுது!

மண்ணும் ஈரம் ஆகுது!

மரம் செடிகள் ஆடுது!

மான்கள் துள்ளி ஓடுது!

தவளை மட்டும் கத்துது!

தாவித் தாவிக் குதிக்குது!

## செயல்பாடுகள்.

- பாடலை இசையுடன் பாடுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த வரி எது? காரணம் என்ன?
- மழை தொடர்பாக வரும் சொற்களை வட்டமிடுங்கள்.

## உரையாடுங்கள்...

- நீங்கள் மழையில் விளையாடியதுண்டா?
- மழையில் எப்படியெல்லாம் விளையாடினீர்கள்?
- நீங்கள் மழையில் நனைந்ததுண்டா? எப்பொழுது?

## படம் பார்த்து உரையாடுங்கள்.



மழைக்கு முன்



மழை பெய்யும் பொழுது

- மழை பெய்வதற்கு முன் வானம் எப்படி இருக்கிறது?
- மழை பெய்யும் போது என்னென்ன பார்க்கின்றீர்கள்?
- இடிச் சத்தம் கேட்டதுண்டா?
- இடிச் சத்தம் கேட்டுப் பயந்ததுண்டா?
- இடி இடிக்கும்போது அம்மா என்ன சொல்வார்கள்?

## இணைப்போம்.



இலை



மின்னல்



மழை



காற்று

## படம் பார்த்து எழுதுங்கள்.



மலையில் ____________ பெய்தது.






இலையில் ____________ பெய்தது.



________ யில் ____________ பெய்தது.

## முதல் எழுத்தை அங்கும் இங்கும் மாற்றினால்.

ஈரம் - பாட்டி ____________ ____________

ஈரம் - காயம் ____________ ____________

ஈரம் - அசல் ____________ ____________

## வேறுபாடு அறிந்து எழுதுவோம்.

- கட்டி - காட்டி - கெட்டி
- மட்டை - ________ - ________
- பட்டி - ________ - ________
- வடி - ________ - ________



## எழுத்துகள் இடம் மாறினால்.

ம ழை

இ டி

## முதல் எழுத்தை மாற்றினால்.

இடி → ______, ______, ______ (பி, க, த)

இடி → ______, ______, ______ (ம, அ, ஆ)

மின்னல் - ______, ______, ______ (ச, இ, பி)

இலை → ______, ______, ______ (வ, த, க)

இலை → ______, ______, ______ (ஆ, மா, கா)

## கடைசி எழுத்தை மாற்றினால்.

ம

ழை மழை

லை ______

டை ______

னை ______

## பொருத்தமான இடத்தில் எழுதுங்கள்.

(மழை, இடி, காற்று, மின்னல், இலை)

- ------------------------------ இடிக்கிறது.
- ------------------------------ வீசுகிறது.
- ------------------------------ மின்னுகிறது.
- ------------------------------ உதிர்கிறது.
- ------------------------------ பெய்கிறது.

## விடுகதைக்கு விடை எழுதுங்கள்.

- வானத்திற்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி. ________________
- ஒற்றைக் கால் குள்ளனுக்கு எட்டுக் கை. ________________
- வானத்திலே தங்கக்கம்பி; பிடிக்க முடியாது, எடுக்க முடியாது. ________________
- உலகமெல்லாம் சுற்றுவேன், யாரும் என்னைக் கண்டதில்லை. ________________



# குளம் நிறைந்தது

மழை... மழை... மழை...

எங்கும் அடை மழை.

குளம் குட்டை நிறைந்தது.

தவளை மகிழ்ந்தது.

அது தாமரை இலையில் தாவியது.

ஆமை சிரித்தது.

குளத்தில் குதித்தது.

பூவைப் பறித்தது.

''வா விளையாடலாம்''

தவளையை அழைத்தது.

''நானும் வரட்டுமா?''

நண்டு கேட்டது...!



## கலந்துரையாடுங்கள்.

- தொடர்ந்து மழை பெய்தால் என்னவாகும்?
- மழையே பெய்யாவிட்டால் என்னவாகும்?

## எழுதுங்கள்.

மழை மழை ________

எங்கும் அடை ________


________ நிறைந்தது

________ மகிழ்ந்தது

## புள்ளியை இணைப்போம்; நிறம் கொடுப்போம்.



## உரையாடுங்கள்...



## எழுதுங்கள்...

(குளம், ஆறு, குடம், கிணறு, குடை, மரம், பூ)

மழை பெய்தது

- .................... நிறைந்தது
- .................... நனைந்தது
- .................... நிறைந்தது
- .................... நனைந்தது
- .................... நிறைந்தது
- ..................................................
- ..................................................

## சொல்லுங்கள்.



---------------------- ஓடியது.




---------------------- பறந்தது.



---------------------- தாவியது.

JT 203-4/Tamil-1

# தண்ணீரும் தவளையும்


இதோ ஒரு பாக்கு மட்டை. படகு விளையாட்டு விளையாடலாமா!
ஐலசா! ஐலசா
ஏலே லோ ஐலசா!
வந்தால் ஆபத்தாச்சே!
இந்த பக்கம் வராதீங்க!
ஐயோ!
?

## உரையாடுங்கள், எழுதுங்கள்.

- படகு என்ன ஆகியிருக்கும்?
- படகில் உள்ளவர்கள் தப்பித்திருப்பார்களா? எப்படி?
- படகில் யார் யார் இருந்தார்கள்?
- படகோட்டி யார்?

## நானே வாசிப்பேன்.



சின்ன சின்ன பாப்பா
சீதை வீட்டுப் பாப்பா
சாரல் மழை பாப்பா
சன்னல் அடை பாப்பா
சின்னப் பழம் தா... தா...
சீதை அக்கா தா... தா...
இல்லை இல்லை வாழைப்பழம்
இரவில் எல்லாம் சாரல்மழை

கதை நேரம்...

# மண்ணாங்கட்டியும் மாவிலையும்.

மண்ணாங்கட்டியும் மாவிலையும் நண்பர்கள்.

எங்கு சென்றாலும் சேர்ந்தே செல்வார்கள்.

பக்கத்து ஊரில் திருவிழா...

இருவரும் புறப்பட்டார்கள்.

நடந்தார்கள்.

"ஸ்...ஸ்...ஸ்..."

காற்று வீசியது.

மண்ணாங்கட்டி மாவிலை மேல் அமர்ந்தது.

மாவிலை பறந்து போகாமல் காப்பாற்றியது.



காற்று நின்றது.

இருவரும் மீண்டும்

நடக்கத் தொடங்கினார்கள்.

சற்றுத் தூரம் நடந்தார்கள்.

"சட..சட..மட..மட..."

மழை வந்தது.

“ஐயோ மண்ணாங்கட்டி

கரைந்து போகுமே!”

மாவிலை யோசித்தது.

மாவிலை மண்ணாங்கட்டி

மேல் அமர்ந்தது.

மண்ணாங்கட்டி கரைந்து

போகாமல் காப்பாற்றியது.



மழை நின்றது.

இருவரும் மீண்டும் நடக்கத் தொடங்கினார்கள்.

சற்றுத் தூரம் நடந்தார்கள்.

“ஸ்ஸ்ஸ்... சட...சட... பட... பட...”

காற்றும் மழையும் சேர்ந்து வந்தது.

இருவருக்கும் என்னவாகியிருக்கும்?



◌், ◌ா, ◌ி

◌ீ, ◌ை,


◌ெ

## நான் கற்ற சொற்கள்.

அ, ஆ, இ, ஈ, எ

அலகு 4

# விதைப்போம் மகிழ்வோம்



## பசி ஆற...

"அம்மா பசிக்குது"

ஐஸ்வர்யாவின் குரல் கேட்ட

விவசாயி வருந்தினான்.

"என்ன செய்வது?"

கண்ணை மூடி இறைவனை

வணங்கினான். கண் திறந்தபோது

ஒரு தேவதை காட்சியளித்தது.

தேவதையின் கையில் இரண்டு

பொட்டலங்கள். "இன்று மட்டும்

பசிதீர ஒரு பொட்டலம்.

காலமெல்லாம் பசி தீர

வேறொரு பொட்டலம்.

எது வேண்டும்?"

தேவதை கேட்டது.

“காலமெல்லாம் பசி தீர்க்கும்

பொட்டலம்” விவசாயி சொன்னான்.

பொட்டலத்தை எடுத்துக்கொண்டு

வீட்டை அடைந்தான்.



மனைவி பொட்டலத்தை

அவிழ்த்துப் பார்த்தாள்.

கோபத்துடன் தூக்கி எறிந்தாள்.

விதைகள் சிதறி விழுந்தன.

“அம்மா பசிக்குது”...


ஐஸ்வர்யா மீண்டும்


அழத்தொடங்கினாள்.

## சொல்லுங்கள்.

- இனி விவசாயி என்ன செய்வான்?
- நீங்கள் ஐஸ்வர்யாவாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
- உங்களுக்கு எத்தனை விதைகளின் பெயர்கள் தெரியும்? சொல்லுங்கள்.
- பாடப்பகுதியில் ‘ஐஸ்வர்யா’ என்ற பெயர் எத்தனை முறை வந்துள்ளது? வட்டமிடுங்கள்.

## விதை உருவம் வரைவோமா?





## என்னென்ன விதைகள்?






தேவதை தோன்றினாள்.

"நான் கொடுத்த விதைகளை வீசி எறிந்தாயா? தரையில் விழுந்த விதைகள் உன் தோட்டத்தில் விளையாது. மிச்சம் உள்ள விதைகளையாவது ஒழுங்காகப் பயிர் செய்."

விவசாயி வருந்தினான். பொட்டலத்தில் இருந்த விதைகளைப் பத்திரப்படுத்தினான்.




- உங்கள் பகுதியில் என்னென்ன பயிர்கள் விளைவதில்லை?

## முடியும் எழுத்து முதல் எழுத்தாகுமா?

- மனைவி - விறகு - குதி - திலகா - காசு -
- பசி - சிரிப்பு - புடவை - வைதேகி - கிழங்கு -

## ஓர் எழுத்தை மாற்றி.

- விதை - கதை , பாதை, ................., ................., .................
- விடை - கடை, ................., ................., .................
- பசி - படி, ................., ................., .................
- ஊசி, பாசி, ................., ................., .................
- ஐஸ்வர்யா என்ற பெயரிலிருந்து எத்தனை சொற்கள் உருவாக்க முடியும்?

  ஐவர், ................., .................,

## நானே வாசிப்பேன்.

ஏத்தன் பழம் தின்ற

ஏழைக் கிழவன்.

ஏப்பம் விட்டார்

ஏப் ஏப் ஏப்...

## வாசிப்போம்.



ஐஸ்வர்யா ஓடினாள்.

ஐயாவைத் தேடினாள்.

ஐந்து ரூபாய் கேட்டாள்.

ஐந்து ஐஸ் வாங்கினாள்.

ஐலசா ஐலசா பாடினாள்.

ஐஸ் உருகிப் போனது.

'ஐயோ' என்றே அலறினாள்.

ஐஸ் போனால் போகட்டும்.


ஐஸ் மீண்டும் வாங்கலாம்.

ஐயா சொன்னார் ஆறுதல்.

## எழுதுங்கள்.

- பசி என்ற சொல் சேர்ந்து வரும் தமிழ் மாதம் ______
- கை என்ற சொல் சேர்ந்து வரும் தமிழ் மாதம் ______
- திரை என்ற சொல் சேர்ந்து வரும் தமிழ் மாதம் ______





# தாயும் சேயும்...



காட்டில் ஒரு ஆலமரம்.

அதில் ஒரு புறாக் கூடு.

கூட்டில் ஒரு புறா.

புறாவிற்கு இரண்டு குஞ்சுகள்.

குஞ்சுகள் பறக்காமல் தூங்கின.

“பறந்து பழகுங்கள்”

தாய்ப் புறா சொன்னது.

ஒரு புறாக் குஞ்சு பறந்து பழகியது.

மற்றது தூங்கியது.

ஒரு நாள்...

பூனை ஒன்று வந்தது.

“ஆகா நல்ல இரை!”

கூட்டை நெருங்கியது.

பட பட ...

பறக்கத் தெரிந்த குஞ்சு பறந்தது.

‘ஐயோ..’ மற்றது அலறியது.

அம்மாப் புறா வந்தது.


குஞ்சைத் தூக்கிப் பறந்தது.

# விதைத்தான் - விளைந்தது


மழையின்றி விதைகள் முளைக்காதே!

நான் என்ன செய்வது?


விவசாயி தேவதையை நினைத்தான்.



சடசட... படபட... மழை வந்தது.




கலப்பையை எடுத்தான்.



நிலத்தை உழுதான்.




விதை விதைத்தான்.



நீர் பாய்ச்சினான்.



களை பறித்தான்.



பயிர்கள் வளர்ந்தன.



அறுவடை செய்தார்கள்.

## வேலைகளை வரிசைப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| உரம் போடுதல் | 1. ______________ |
| விதை விதைத்தல் | 2. ______________ |
| நிலம் உழுதல் | 3. ______________ |
| அறுவடை செய்தல் | 4. ______________ |
| களை எடுத்தல் | 5. ______________ |

## 'ஏ' யில் தொடங்கும் எத்தனை சொற்களை உருவாக்க முடியும்?




________________ ________________

________________ ________________

________________ ________________

________________ ________________

## உங்கள் ஊரில்?

- உங்கள் ஊரில் இப்பொழுது என்னென்ன விவசாய வேலைகள் நடைபெறுகின்றன?
- உங்களுக்கு என்னென்ன விவசாய வேலைகள் செய்யத் தெரியும்?

## உங்கள் ஊரில் விளைவது எது?

| ஊரில் விளைவது | ஊரில் விளையாதது |
|---|---|
| | |
| | |
| | |



## குழுவில் சேராதது எது? (செடி, கொடி, மரம்)



- கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய்
- மா, பலா, திராட்சை
- தென்னை, பனை, காப்பி



## பூ - காய் -பழம்.



| | |
|---|---|
| பூ | ______<br>______<br>______ |
| காய் | ______<br>______<br>______ |
| பழம் | ______<br>______<br>______ |





# விளைச்சல் பெருக...

'விளைச்சல் பெருக என்ன வழி?

தேவதையிடம் கேட்போம்'.

தேவதையை அழைத்தான்.

தேவதை வந்தது.

"நல்ல மழையும் விதைகளும் தந்துள்ளேன்.

நீயும் நன்கு உழைக்கின்றாய்

இனி உனக்கு என்ன வேண்டும்?"

தேவதை கேட்டது.

"என் வேலை எளிதாக வேண்டும்.

விளைச்சல் பெருக வேண்டும்.

அதற்கு என்ன வழி?"

விவசாயி தயங்கித் தயங்கிக் கேட்டான்.

தேவதை சிரித்தது. வழியும் சொன்னது.

## கலந்துரையாடுங்கள்.



- தேவதை என்ன சொல்லியிருக்கும்?
- அதன்படி விவசாயி என்னென்ன வேலைகள் செய்திருப்பான்?

## உங்கள் ஊரில்.

- உங்கள் ஊரில் உள்ள உழவனின் வீட்டில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன?
- அவற்றால் என்னென்ன வேலைகள் எளிதாகின்றன?
- மேலும் வேலைகள் எளிதாக அவர்கள் என்னென்ன பொருள்களை வாங்க வேண்டும்?
- உங்கள் ஊரில் அதிகமாக விளைவது எது?

## எளிதாக.. விரைவாக.





- விவசாயி தன் வேலைகளை எளிதாக்க என்னென்ன கருவிகளை வாங்கியிருப்பான்?
- அவற்றை வட்டமிடுங்கள்.



## விளைச்சல் பெருக.

- விளைச்சல் பெருக என்னென்ன செய்திருப்பான்?


  - ____________________
  - ____________________

## நண்பர்களும் எதிரிகளும்.

- இவர்களுள் யார் யார் உழவனின் நண்பர்கள்?
- யார் யார் எதிரிகள்?







| நண்பர்கள் | எதிரிகள் |
|---|---|
| | |
| | |
| | |







# தேன் தேன் தேன்...



தேன் தேன் தேன் - நிலம்

உழுதேன்.

தேன் தேன் தேன் - விதை

விதைத்தேன்.

தேன் தேன் தேன் - களை

எடுத்தேன்.



தேன் தேன் தேன் - பயிர்

வளர்த்தேன்.

தேன் தேன் தேன் - அறுவடை

செய்தேன்.


தேன் தேன் தேன் - தேனென

மகிழ்ந்தேன்.

## சொல்ல முடியுமா?

- தேன் என்று **முடியும்** எத்தனை சொற்களை ஐந்து நிமிடத்திற்குள் சொல்ல முடியும்?
- தேன் என்று **தொடங்கும்** எத்தனை சொற்களை ஐந்து நிமிடத்திற்குள் சொல்ல முடியும்?

## எழுதுங்கள்.




## சொல்ல முடியுமா?

(தக்காளி, தேங்காய், திராட்சை)



என் பெயர்
கத்தரிக்காய்.
செடியில் விளைவேன்.
குழம்பு வைக்கப்
பயன்படுவேன்.



என் பெயர் மாங்காய்.
மரத்தில் காய்ப்பேன்.
ஊறுகாய் போடப்
பயன்படுவேன்.

## நான் உருவாக்கிய சொற்கள்.

## செயல்திட்டம்.

* விதை சேகரிப்பு.

## மாதிரியைப் போல் எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| நிலம் | - | நீலம் |
| சிட்டு | - | |
| திட்டு | - | |
| இட்டு | - | |
| விடு | - | |

## சொற்கள் உருவாக்கலாம்.




## சொல்ல முடியுமா?

| | | |
|---|---|---|
| பெட்டி | - | பேட்டி |
| வெட்டி | - | _____ |
| _____ | - | சேம்பு |
| _____ | - | தேம்பு |
| செய் | - | _____ |

அலகு 5

# பூக்களும் காய்களும்

## வண்ண வண்ணப் பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள் பார்!

சிரிக்கும் அழகுப் பூக்கள் பார்!

வண்ண வண்ணப் பூக்கள் பார்!

வாசம் வீசும் பூக்கள் பார்!

முல்லை மல்லிகை பிச்சிப்பூ

வெள்ளை நிறத்தில் சிரிக்கிறதே!





மஞ்சள் நிறச் செவ்வந்தி

மனதைக் கவர்ந்து இழுக்கிறதே!

தாமரை ரோஜா செம்பருத்தி

தெவிட்டும் தேனைத் தந்திடுதே!

எல்லாப் பூவிலும் தேனுண்டு

தேனைக் குடிக்க நானுண்டு!








- பாடலை இசையுடன் பாடுங்கள்.
- பாடலில் பூக்கள் என்ற சொல்லை வட்டமிடுங்கள். எத்தனை முறை வந்துள்ளது?




- பாடலில் என்னென்ன பூக்களின் பெயர்கள் வந்துள்ளன? சொல்லுங்கள்.
- உனக்குப் பிடித்த பூ எது?
- உங்களுக்குத் தெரிந்த பூக்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.

## தலையில் சூடும் பூவிற்கு வட்டமிடுங்கள்.





செம்பருத்தி

தாமரை ரோஜா





செவ்வந்தி பிச்சி

முல்லை மல்லிகை

தாழம்பூ





## பட்டியலிடுவோம்.

நிறங்களின் அடிப்படையில் பூக்களைப் பட்டியலிடுங்கள்.

சிவப்பு

மஞ்சள்

வெள்ளை

______ ______ ______

______ ______ ______

______ ______ ______

## பூவில் உள்ள சொற்களைச் சொல்லுங்கள்.




______

______

______

______

______


______

## பூ உண்டு; பூ அல்ல.

- 'பூ'ட்டில் ஒரு 'பூ' உண்டு. பூட்டு ஒரு பூவல்ல.
- 'பூ'ண்டில் ஒரு 'பூ' உண்டு. பூண்டு ஒரு பூவல்ல.
- ______
- ______


## 'பு' ... 'பு'... என்ன 'பு'? சொல்லுங்கள்.


- இனிப்பிலே ஊரும்'பு' என்ன'பு' ? எறும்பு
- முகத்திலே மலரும் 'பு' என்ன 'பு' ? ______
- காலிலே அணியும் 'பு' என்ன 'பு' ? ______
- ......................................................
- ......................................................
- ......................................................







## வரைவோம் வண்ணம் தீட்டிப் பெயர் எழுதுவோம்.







# மலைத் தோட்டம்

அணிலுக்குப் பசி வந்தது.

மலைத் தோட்டத்திற்குச் சென்றது.

சுற்றும் முற்றும் பார்த்தது.

மரம் நிறைய மாம்பழம்.

குலை குலையாய் வாழைப்பழம்.

கொத்துக் கொத்தாய்த் திராட்சைப்பழம்.

குண்டு குண்டாய்க் கொய்யாப்பழம்.

செடி நிறையத் தக்காளிப்பழம்.

அடி மரத்தில் பலாப்பழம்.

முட்டை போலக் கத்தரிக்காய்.

பானை போலப் பூசணிக்காய்.

எதைத் தின்பது... ?

அணில் மலைத்து நின்றது.




## கலந்துரையாடுங்கள்.

- அணில் எந்தெந்தப் பழங்களைச் சாப்பிட்டிருக்கும்?
- இரண்டு நிமிடத்திற்குள் உங்களால் எத்தனை பழங்களின் பெயர்களைச் சொல்லமுடியும்?
- அவை எப்படிக் காய்த்துள்ளன?




## வட்டமிடுங்கள்.

- படத்தில் வரும் பழங்களை வட்டமிடுங்கள்.

## முதல் எழுத்து மாறினால்..

முட்டை

குண்டு

ம—

ச—

து—

ந—


அ—

கு—

த—

வ—

## சொற் சூரியனிலிருந்து...




- அம்மாவைக் குறிக்கும் வேறு சொல் ——
- இது பழுத்தால் பழமாகும் ————
- உடம்பிலுள்ள ஓர் உறுப்பு ————
- இது வீட்டைக் காவல் காக்கும் ———
- இதை விரித்துப்படுக்கலாம் ————

## எழுத்துகளை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.

சபூக்ணிய்கா = ..............................................

ய்க்காதரித்க = ..............................................

காதளிக் = ..............................................

பாற்ய்ககா = ..............................................



## சரியானவற்றை எடுத்து எழுதுங்கள்.

(பெய், பொய், போய்)

- மழை ———தால் மண் நனையும்.
- இன்று ———நாளை வா.
- ——— சொல்லக் கூடாது.

## ஓரெழுத்து மாறினால்...



பழம் < ............ / ............ / ............ (ல ண ட)

## கண்டுபிடித்து இணைத்துப் பாருங்கள்.



1. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள்.
2. சிவப்புப் பெட்டியிலே சில்லறை சிதறிக் கிடக்குது.
3. காளை கிடக்கும். கயிறு ஓடும்.
4. அப்பன் சொறியன், அம்மா சடைச்சி, பிள்ளை சக்கரைக்கட்டி.



## காய்கறி அச்சு.





## வேகமாகச் சொல்ல முடியுமா?

| | | |
|---|---|---|
| வால் | வாள் | வாழ் |
| வாழை | வாளை | வாலை |


## சொல்லுங்கள் பார்க்கலாம்...

- வாழைப் பழத் தோல் வழுக்கி ஏழைச் சிறுவன் பள்ளத்தில் விழுந்தான்.
- அல்லியும் வள்ளியும் பள்ளிக்குச் சென்றார்கள்.





## காய்கறிப் பூனைக்குப் பொருத்தமான நிறம் கொடுப்போம்.



## சரியானவற்றை வட்டமிடுங்கள்.

| | |
|---|---|
| பையன் | பய்யன் |
| தையல் | தய்யல் |
| மய்னா | மைனா |

## அடுக்கிவரும் அழகு.

- குலை குலையாய் வாழைப்பழம்
- ________________ திராட்சைப்பழம்
- ________________ ________________



## சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

| | | |
|---|---|---|
| ✿ கொத்து → | காத்து → | கத்து |
| ✿ பொட்டு → | ______ → | ______ |
| ✿ கொட்டு → | ______ → | ______ |

## வேறுபாடு அறிந்து எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| ✿ பட்டு → | பாட்டு → | பொட்டு |
| ✿ கட்டு → | ______ → | ______ |
| ✿ மட்டு → | ______ → | ______ |
| ✿ தண்டு → | ______ → | ______ |

## பாடி மகிழ்!




மாம்பழமாம் மாம்பழம்

மல்கோவா மாம்பழம்

சேலத்து மாம்பழம்

தித்திக்கும் மாம்பழம்

## நான் கற்ற சொற்கள்.

அலகு 6

# ஏமாற்றாதே...! ஏமாறாதே...!

## உழவூருக்குப் போவோமா?



பறந்து வந்த பருந்து தரை இறங்கியது.

சுமந்து வந்த தானியப் பையைத்

தரையில் வைத்தது.

“இப்பொழுதாவது வந்தாயே!

இன்னும் சில நாட்கள் ஆகியிருந்தால்...!

நாங்கள் பசியால் செத்தே போயிருப்போம்.”

மூத்த குருவி தானியங்களைக்

கொத்திக் கொண்டே சொன்னது.

“அங்கே பழம் ஒன்றும் இல்லையா?”

பச்சைக் கிளி பரிதாபமாகக் கேட்டது.

“ஏ ஏ... ப்” காகம் ஏப்பம் விட்டது.





“நல்ல சுவையாக இருக்கிறது”

கரிச்சான் குருவி

சப்புக் கொட்டிச் சொன்னது.

“இப்படித் தினமும் கிடைத்தால்...?”

புறா ஏக்கமாகக் கேட்டது.

“அங்கே தூரத்தில் உழவூர் இருக்கிறது.

அங்கு விளைந்தவை தான் இவை.

அங்குதான் போகப் போகிறோம்”

பருந்து சொன்னது.

“சட... சட... சட... பட... பட... பட.... ஹைய்”

பறவைக் குஞ்சுகள்

குதியாட்டம் போட்டுக் கிளம்பின.



## சொல்லுங்கள்.


- உழவூரில் மட்டும் பறவைகளுக்கான உணவு கிடைத்ததெப்படி?
- நீங்கள் பசியோடு உணவுக்காகக் காத்திருந்தது உண்டா?
- அப்பொழுது கிடைத்த உணவை எப்படி உண்டீர்கள்?
- அப்பொழுது என்ன நினைத்தீர்கள்?

## தினமும்.




- நீங்கள் இப்படி நினைத்ததுண்டா?
- எது எது இப்படித் தினமும் கிடைக்க வேண்டும்?
- உங்களுக்கு விருப்பமான ஒன்று எதிர்பாராமல் கிடைத்தால் எப்படிக் கூவுவீர்கள்?
- என்ன செய்வீர்கள்?

## ஊர் ஊராய் - சொல்லுங்கள்.




## நிரப்புங்கள்.

(கருப்பு, மஞ்சள், வெள்ளை, பச்சை)





நீலக் குயில்

______ குருவி

______ புறா

______ கிளி





## பாடி மகிழ்!



துறையூரு துரைசாமி
தூத்துக்குடி போனாராம்!
துள்ளித் துள்ளி மீன்களும்
துடுப்புப் போட்டு வந்ததாம்!
தூண்டில் போட்ட துரைசாமி
மூக்கில் துள்ளி விழுந்ததாம்!
தும்மல் போட்ட துரைசாமி
துள்ளிக் கடலில் விழுந்தாராம்!
பார்த்து நின்ற தும்பியோ
துண்டைத் தூக்கிப் பறந்ததாம்!

## சொல்லமுடியுமா?

(முடி - மூடி)

| | | |
|---|---|---|
| குண்டு | - | ________ |
| ______ | - | கூடை |
| புட்டு | - | ________ |
| ______ | - | சூடு |
| ______ | - | தூண்டு |
| முட்டை | - | ________ |

# திருவிழா நடக்குமா?



நம்மை ஓட ஓட விரட்டிய உழவூருக்குத் திருவிழாவா? நடக்க விடக்கூடாது.
விளக்கா வைக்கிறீர்கள்? எப்படி எரிகிறதென்று பார்ப்போம்...!
தோரணமா கட்டுகிறீர்கள்? தோரணத்தைக் கிழிக்கிறேன்.
தேரா கட்டுறீங்க தேர்... தேர் பப்படம் ஆகும்பார்.
வசமா மாட்டிக்கிட்டிங்களா...? இங்கேயே கிடங்க.

# திருவிழா நடக்குமா?

- அகப்பட்டவர்களை என்ன செய்வார்கள்?
- அவர்கள் ஏன் திருவிழாவைக் கெடுக்கப் பார்த்தார்கள்?
- அவர்கள் எண்ணம் நிறைவேறியதா?
- அவர்கள் திட்டம் நிறைவேறி இருந்தால் என்ன ஆகியிருக்கும்?
- கதையை முழுமைப்படுத்திச் சொல்லுங்கள்?
- அவர்கள் செய்தது சரியா? தவறா?




## வாங்கமுடியாததை வட்டமிடுங்கள்


புடவை, பூட்டு, பூண்டு, பூரி, பூகம்பம்

குப்பை, கூடை, கூண்டு, குடை, கூலி

துப்பாக்கி, தூண்டில், தூசி, ஊசி



## உங்கள் ஊரில்...



- உங்கள் ஊரில் என்னென்ன திருவிழாக்கள் கொண்டாடுகிறீர்கள்?



- திருவிழாக் கொண்டாடும் முன் வீட்டில் என்னென்ன வேலைகள் நடைபெறும்?
- ஊரில் என்னென்ன வேலைகள் நடைபெறும்?
- திருவிழா நாளில் என்னென்ன செய்வீர்கள்?
- திருவிழா நாளில் ஊரில் என்னென்ன பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடக்கும்?



## குழுவில் சேராததை வட்டமிடுங்கள்.

- முகம், முடி, மூக்கு, முறுக்கு, முழங்கை
- சுகந்தி, சூட்டு, சுமதி, சுப்பு, சூரியன்
- துண்டு, தும்மல், தும்பி, துடுப்பு, தூண்டில்



## உங்களுக்குப் பிடித்தது.

- உங்களுக்குப் பிடித்த திருவிழா எது? ஏன்?





## சொல்லிப் பாருங்கள்.

நரியூர் புலியூர் துறையூர்

மங்களூர் பெங்களூர் பெரம்பலூர்

உள்ளூர் வெளியூர்

அந்த ஊரு இந்த ஊரு

எந்த ஊரு ஆனாலும்

எங்க ஊரு நல்ல ஊரு!



## நான் கற்ற சொற்கள்.



# அதிசயத் திருவிழா

உழவூரில் திருவிழா
புள்ளினங்கள் எடுத்தன.
காட்டில் எங்கும் தோரணங்கள்
கட்டி அழகு செய்தன.
மின் மினிப் பூச்சிகள்
வண்ண விளக்கு ஏற்றின.
காடு அழகு பெற்றது
நிலா கண்டு சிரித்தது.



இரவு நேரம் வந்தது
மயில் நடனம் செய்தது.
குயில் பாட்டுக் கேட்கவே
உழவூரே திரண்டது.
தையல் குருவி வந்தது
தங்கத் தேர் செய்தது.
புறாக்கள் ஒன்று கூடியே
தேரைத் தூக்கிப் பறந்தன.
இந்த விழா போலவே
எங்கும் நடந்த தில்லையே!



## செய்தது யார்?

வண்ண விளக்கு ஏற்றியது - ____________

நடனம் ஆடியது - ____________

பாட்டுப் பாடியது - ____________

தேர் செய்தது - ____________

தேரைத் தூக்கியது - ____________

## மாற்றி எழுதுங்கள் - வாசியுங்கள்.

(வண்ணம், புள்ளினம், காடு, சந்திரன்)

எத்தனை எத்தனை பறவைகள்

எத்தனை எத்தனை நிறங்கள்

அவை

வனம் தேடிப் போயின.

நிலா பார்த்துச் சிரித்தது!


ஹா . . . ஹா . . . ஹா . . .



## என்னென்ன திருவிழா?



பட்டார் பட்டார் பட்டாசு
ஊரெங்கும் வெடித்திடும்.
வகை வகையாய்ப்
பலகாரம் வீடெங்கும்
மணத்திடும்.



கரும்பு மஞ்சள் தோரணம்
கட்டி அலங்காரம் செய்து
புத்தம் புதுப் பானையில்
புத்தரிசி பொங்கிடும்.

. ................................................ ................................................

## மாதிரியைப் போன்று வரிசைப்படுத்துங்கள்.

அம்மா
ஆடு
இலை
ஈரம்
உரல்
ஊஞ்சல்
எலி
ஏணி
ஐந்து

ஆமை, ஈட்டி
இடி ஏலம்
எட்டு
அணில் ஐவர்
ஊசி
உடை

# ஆசை ஆசை ஆசை...



கடலூர் திருவிழா
காண எனக்கு ஆசையே!
கடிகாரம் வாங்கியே
கட்ட எனக்கு ஆசையே!

பல்லாவூர் திருவிழா
பார்க்க எனக்கு ஆசையே!
தொப்பி ஒன்று வாங்கியே
வைத்துக் கொள்ள ஆசையே!



பெங்களூரு திருவிழா
போக எனக்கு ஆசையே!
பலூன் ஒன்று வாங்கியே
ஊதிக் காட்ட ஆசையே!



# கடல் சிரித்தது...

ஆறுகளுக்குக் கடல் மீது கோபம்.

“நாம் நல்ல நீரைத் தருகிறோம்

ஆனால் இந்தக் கடலோ

அதை உப்பு நீராக்கிவிடுகிறது.”

ஓர் ஆறு சொன்னது.

“இந்தக் கடலைச் சும்மா விடக்கூடாது”

மற்றொரு ஆறு சொன்னது.

‘இனி கடலோடு கலப்பதில்லை’

அவை ஒன்று கூடித் தீர்மானித்தன.

“என்னிடம் வாருங்கள்” கடல் கெஞ்சியது.

ஆறுகள் இசையவில்லை.

இந்த ஆறுகளுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்.

கடல் தீர்மானித்தது.

ஆவியாவதை நிறுத்தியது.





நீராவி கிடைக்காமல் மேகம் தவித்தது.

கார்மேகம் ஆகாமல் மிதந்தது.

அதனால் மழையே பெய்யவில்லை.

ஆறுகள் நீரின்றித் தவித்தன.

தங்கள் தவறை உணர்ந்தன.

“எங்கள் தவறை மன்னிப்பாயா?”

கடலிடம் கெஞ்சின.

கடல் சிரித்தது.



**பாடி மகிழ்!**

## படார் என்று வெடித்தது…



பத்து பைசா விலையிலே
பலூன் ஒண்ணு வாங்கினேன்;
பலூன் ஒண்ணு வாங்கியே
பையப் பைய ஊதினேன்;
பையப் பைய ஊதவே
பலூன் பருத்து வந்தது;
மேலும் கொஞ்சம் ஊதவே
பானை போல ஆனது;
பானை போல ஆகியே
படார் என்று வெடித்தது!